**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண்.11/2024**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய **<u>சுந்தரேசன் PW. 1</u>** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 13.02.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சுந்தரேசன் | | |
| Father Name | : | சௌர்ணபுரீசன் | Court | : |
| Village | : | கும்பகோணம் | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 62 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

30.11.2011 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு பாண்டியன், முரளி, சரவணகுமார் ஆகியோர் எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.06.2023 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.